தஞ்சாவூர் மாவட்டத்தில் மாபெரும் சோழர் அருங்காட்சியகம் அமைத்தல் பணி தொடர்பான பணிகளை நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு ஆய்வு செய்தார்.ஆய்வின் போது தமிழ்நாடு சுற்றுலா பன்பாடு (ம) அறநிலையத்துறை அரசு முதன்மை செயலர் முனைவர். க.மணிவாசன், அருங்காட்சியக ஆணையர் (மு.கூ.பொ) மா.அரவிந்த், முன்னிலையில் மாவட்ட ஆட்சித் தலைவர் தீபக் ஜேக்கப், சட்டமன்ற உறுப்பினர்கள் துரை சந்திரசேகரன் (திருவையாறு), டி.கே. ஜி. நீலமேகம் (தஞ்சாவூர்), மாநகராட்சி மேயர் சண்.ராமநாதன், மாவட்ட ஊராட்சித் தலைவர் ஆர்.உஷா புண்ணியமூர்த்தி, தஞ்சாவூர் மாநகராட்சி துணை மேயர் மரு. அஞ்சுகம் பூபதி, தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையர் சரவணகுமார், மாவட்ட சுற்றுலா அலுவலர் கே.நெல்சன், தஞ்சாவூர் அரசு அருங்காட்சியகம் காப்பாட்சியர், சி.சிவகுமார் (பொ) மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

தஞ்சாவூர் மாவட்டத்தில்

மாபெரும் சோழர் அருங்காட்சியகம் அமைக்கும் பணி!

நிதி - மின்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு நேரில் ஆய்வு!

தஞ்சாவூர் ஆக.6-

தஞ்சாவூர் மாவட்டத்தில் மாபெரும் சோழர் அருங்காட்சியகம் அமைத்தல் பணி தொடர்பான பணிகளை நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு ஆய்வு செய்தார்.

ஆய்வின் போது நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுக் கிணங்க சட்டப்பேரவையில் மானியக் கோரிக்கையின் போது உலகாண்ட சோழர்களின் பங்களிப்பை போற்றவும் அக்கால கலைப்பொருட்கள் நினைவுச் சின்னங்களை பாதுகாக்கவும் தஞ்சாவூரில் மாபெரும் சோழர் அருங்காட்சியகம் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அருங்காட்சியகம் அமைப்பதற்காக தஞ்சாவூர் பெரியகோயில் அருகேயுள்ள மேம்பாலம் அருகில் உள்ள இடத்தை மாவட்ட ஆட்சியர் ஏற்கெனவே தேர்வு செய்து, துறைச் செயலர் உள்ளிட்ட அலுவலர்களிடம் காண்பித்துள்ளார். இந்த இடம் ஏற்புடையதாக உள்ளது என துறைச் செயலர் கூறியதன் அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்டது.ய

தஞ்சாவூர் மாநகரில் இவ்வளவு பெரிய இடம் கிடைத்திருப்பது அரியவாய்ப்பாக இருக்கிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் எண்ணம் வீண் போகாத வகையில் சிறந்த அருங்காட்சியகத்துக்கு இந்த இடம் ஏற்புடையதாக உள்ளது.

தஞ்சாவூரில் சோழர்களின் பெருமையை பறைசாற்றும் விதமாக அருங்காட்சியகம் அமைக்க முதல்வர் உத்தரவிட்டார். இந்திய வரலாற்றில் சோழர்களின் காலம் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. கடல் கடந்த வாணிபமும், போர்வெற்றியும் அவர்களின் ஆட்சி முறையும் இந்தியாவில் இருந்த எத்தனையோ அரசாட்சிகள் நடந்திருந்தாலும், முதன்மையாக சோழர்களின் காலம் விளங்கியது. தஞ்சாவூர் பெரிய கோவில் கட்டிய மாமன்னன் இராசராச சோழன், கங்கைகொண்ட சோழபுரம் கட்டிய ராஜேந்திர சோழன் என பிற்காலச் சோழர்களின் பங்களிப்பு தமிழகத்தில் நிலை நாட்டிய பெருமை உண்டு. சோழர்களின் போர் வெற்றி,

கோவில் பணிகள்,சமுதாயப் பணிகள்,கலைத்திறன் என எல்லாவற்றையும் விளக்கக் கூடிய வகையில் அருங்காட்சியகம் அமைய உள்ளது.ஏற்கனவே 1000 ஆண்டு விழாவின்போது சோழர்களின் பெருமையை விளக்கும் விதமாக மிகப்பெரிய கண்காட்சி நடத்தப்பட்டது.

அது ஒரு குறிப்பிட்ட காலம் தான் நடைபெற்றது.தற்போது நிரந்தரமாக இந்த அருங்காட்சியகம் தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைய உள்ளது. தற்போது தேர்வு செய்யப்பட்டுள்ள இடம் பெரிய கோவில் அருகே அமைந்துள்ளதால் மிகவும் சிறப்பாக உள்ளது.

பெரிய கோவிலுக்கு வரும் சுற்றுலா பயணிகளுக்கு எளிதாக அருங்காட்சியத்திற்கு வந்து பார்ப்பதற்கு சிறந்த இடமாக அமைந்துள்ளது. விரைவில் முதல்வரின் ஒப்புதலின் பேரில் கட்டுமான பணிகள் துவங்கப்படும். என்றும் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறைஅமைச்சர் தங்கம். தென்னரசு தெரிவித்தார்.

ஆய்வின் போது தமிழ்நாடு சுற்றுலா பன்பாடு (ம) அறநிலையத்துறை அரசு முதன்மை செயலர் முனைவர். க.மணிவாசன், அருங்காட்சியக ஆணையர் (மு.கூ.பொ) மா.அரவிந்த், முன்னிலையில் மாவட்ட ஆட்சித் தலைவர் தீபக் ஜேக்கப், சட்டமன்ற உறுப்பினர்கள் துரை சந்திரசேகரன் (திருவையாறு), டி.கே. ஜி. நீலமேகம் (தஞ்சாவூர்),

மாநகராட்சி மேயர் சண்.ராமநாதன், மாவட்ட ஊராட்சித் தலைவர் ஆர். உஷா புண்ணியமூர்த்தி, தஞ்சாவூர் மாநகராட்சி துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி, தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையர் சரவணகுமார், மாவட்ட சுற்றுலா அலுவலர் கே.நெல்சன், தஞ்சாவூர் அரசு அருங்காட்சியம் காப்பாட்சியர், சி.சிவ குமார் (பொ) மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

மதுரை கிழக்கு தொகுதி கிழக்கு ஒன்றியத்தில் - ரூ.15கோடி மதிப்பீட்டில்

முடிவுற்ற திட்டப்பணிகள் திறப்பு! மகளிர் சுய உதவிகுழுக்களுக்கு கடனுதவி!

அமைச்சர் பி.மூர்த்தி மக்களை நேரில் சந்தித்து வழங்கினார்!

மதுரை, ஆக. 6-

மதுரை கிழக்கு தொகுதிக்குட்பட்ட கிழக்கு ஊராட்சி ஒன்றியத்தில் பல்வேறு கிராமங்களில் சுமார் ரூ15கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட கட்டிடங்கள், புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல்நாட்டு விழா மற்றும் சுய உதவிகுழு பெண்களுக்கு கடனுதவி என பல்வேறு திட்டப் பணிகளை கொளுத்தும் வெயிலென்றும் பாராமல் நேரடியாகச் சென்று மக்களை சந்தித்து வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி துவக்கி வைத்து சிறப்பித்தார், பொதுமக்கள் மகிழ்ச்சியுடன் சிறப்பான வரவேற்பு கொடுத்து நன்றி தெரிவித்தனர். அதன்விபரம்:

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தலின் போது கொடுத்த வாக்குறுதிகளை தொடர்ந்து நிறைவேற்றி மக்களை மகிழ்வித்து வருகிறார். அதேபோல் முதல்வரின் அறிவுறுத்தலின்படி மக்களை நேரில் சந்தித்து அவர்தம் குறைகளை கேட்டறிந்து நிறைவேற்ற வேண்டுமென்ற நோக்கோடு மக்கள் பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி புதிய அங்கன்வாடி கட்டிடம், கிராம சாலைகள் என ரூபாய் 3 கோடியே 17 இலட்சத்து 23 ஆயிரம் மதிப்பீட்டில் 24 வளர்ச்சி திட்டப் பணிகளை தொடங்கி வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

மதுரை கிழக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, கிழக்கு ஊராட்சி ஒன்றியத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி காலை 7.00 மணி தொடங்கி இரவு 8.00 மணி வரை பல்வேறு கிராமங்களுக்கு நேரடியாகச் சென்று முடிவற்ற திட்ட பணிகளை தொடங்கி வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பொதுமக்களை நேரடியாக சந்தித்து அவர்தம் குறைகளை கேட்டறிந்து கோரிக்கை மனுக்களைப் பெற்றார்.

அந்த வகையில் மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம் மாங்குளம் கிராமத்தில் ரூ.7 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கிராமச் சாவடி கட்டடத்தை பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார். மேலும் சின்ன மாங்குளம் கிராமத்தில் முதலமைச்சரின் கிராம சாலைகள் திட்டத்தின் கீழ் ரூ.44 இலட்சம் மதிப்பீட்டில் சின்ன மாங்குளம் முதல் பஞ்சந்தாங்கிபட்டி சாலை அமைப்பதற்கான பணிகளை தொடங்கி வைத்தார். அதன் பின்னர் மாத்தூர் ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ரூ 10.19 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய அங்கன்வாடி மைய கட்டிடத்தையும், வெள்ளியங்குன்றம் கிராமத்தில் ரூ 14.59 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள உணவு தானிய சேமிப்பு கிடங்கு கட்டடத்தையும், அரும்பனூர் கிராமத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ 7 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள பேருந்து நிழற்குடையையும் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார். மேலும் ஒவ்வொரு கிராமத்திலும் பொது மக்களை நேரடியாகச் சந்தித்து அவர்களின் குறைகளை கேட்டறிந்து கோரிக்கை மனுக்களை பெற்றார். அவ்வாறு பெறப்பட்ட கோரிக்கை மனுக்களை உடனடியாக ஆய்வு செய்து தீர்வு காண அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

தொடர்ச்சியாக மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தாமரைப்பட்டி, கொடிக்குளம், திருமோகூர், ராஜாக்கூர், வரிச்சியூர், களிமங்கலம், குன்னத்தூர், சற்குடி, கார்சேரி, சத்தியமங்கலம், கருப்பாயூரணி ஆகிய கிராமங்களுக்கு நேரடியாக சென்று ரூபாய் 3 கோடியே 17 இலட்சத்து 23 ஆயிரம் மதிப்பீட்டில் 24 வளர்ச்சி திட்ட பணிகளை தொடங்கி வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். மேலும் திருமோகூர் ஊராட்சியில் புதிய மகளிர் தொழிற்கூடத்தை திறந்து வைத்து 132மகளிர் சுய உதவி குழுக்களுக்கு ரூ11.26கோடி மதிப்பில்கடனுதவிக்கானகாசோலைகளையும் வழங்கினார்.

இந்த நிகழ்வுகளின் போது மதுரை மாவட்ட ஆட்சியர் சங்கீதா, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) சரவணன்,சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், மாவட்ட வருவாய் அலுவலர் சக்திவேல், மாவட்ட ஊராட்சித் தலைவர் சூரியகலா கலாநிதி, ஒன்றிய சேர்மன் மணிமேகலை ராஜேந்திரன்,

துணை சேர்மன் பாலாண்டி, மாவட்ட கவுன்சிலர்கள் வடிவேல்முருகன், நேருபாண்டியன், கழக மாவட்ட பொருளாளர் சோமசுந்தர பாண்டியன், ஒன்றிய செயலாளர்கள் அ.பா.ரகுபதி, மதிவாணன், ஹக்கீம், மாவட்ட பிரதிநிதி அழகுபாண்டி, ஒத்தக்கடை சரவணன், வக்கில் கலாநிதி, சரவணன் மற்றும் அனைத்துத் துறை அலுவலர்கள், அதிகாரிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகத்தினர், பொதுமக்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.